**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 491/2018**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குத்தாலம் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | முத்துமாலைபுரம் | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 01.07.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் முத்துமாலைபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய உறவினர்கள். அ.சா.1 பூமாரி எனது தம்பி மனைவி. அ.சா.1 பூமாரி தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் , எனது தம்பி சரவணனுக்கும், பூமாரிக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் என்றால் சரிதான். எனது இன்னொரு தம்பி மனைவியிடம் தவறான பழக்கம் இருந்ததாக சந்தேகப்பட்டு பூமாரி எனது தம்பியிடம் சண்டை போட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் பூமாரியை சமாதானம் செய்து வைத்தோம்

என்றால் சரியல்ல. எதிரிகள் எனது தம்பிக்கு ஆதரவாக செயல்பட்டு, பூமாரியை கொடுமை செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.02 14:32:12 +0530